**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:569** **நாள்: 13.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (13.10.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலத்தில் கட்டப்பட்டு வரும் மீன் அங்காடி மற்றும் பள்ளிக் கட்டடம் கட்டுமானப் பணி, குட் ஷேட் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, கல்யாணபுரம் சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி மற்றும் நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் பாடி, போத்தீஸ் அருகில் புதியதாக மழைநீர் வடிகால் அமைப்பது குறித்தும், 3ஆவது அவென்யூ டெலிபோன் எக்ஸ்சேஞ் சாலை, எம்.டி.எச். சாலையில் நடைபெற்று வரும் தூய்மைப் பணி, கிழக்கு நிழற்சாலை மற்றும் ஆவின் டயரி சாலைப் பணிகள், பட்டரவாக்கம் சாலையில் கட்டப்பட்டு வரும் கேப்பிட்டாலாண்ட் தரவு மையத்தின் கட்டுமானப் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், அடையாறு ஆற்றில் கொசுப்புழு உற்பத்தினைத் தடுக்கும் வகையில் ட்ரோன் மூலம் கொசுப்புழு நாசினி மருந்து தெளிக்கும் பணி, மணப்பாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பாலப் பணி, பெருங்குடி மண்டலம், ரேடியல் சாலை, பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகம், மயிலை பாலாஜி நகரில் உள்ள கால்வாயில் நடைபெற்று வரும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**